RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 126 | மே.12, 2025 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## இந்தியா பாக். போர் நிறுத்தம் : எல்லையில் மெல்ல திரும்பும் இயல்புநிலை கட்டுப்பாடுகள் நீக்கம்



புதுடெல்லி: மே.12-

இந்தியா பாகிஸ்தான் இடையே நேற்று போர் நிறுத்தம் நேற்று அறிவிக்கப்பட்டது. இருப்பினும் அடுத்த சில மணி நேரங்களில் பாகிஸ்தான் இந்திய எல்லையோர பகுதிகளில் தாக்குதல் நடத்தி அத்துமீறலில் ஈடுபட்டது. இந்நிலையில், நேற்று காலை முதல் ஜம்மு காஷ்மீர், பஞ்சாப், ராஜஸ்தான் மாநிலத்தில் எந்தவித தாக்குதலும் நடைபெறவில்லை என்ற தகவல் களத்தில் இருந்து கிடைத்துள்ளது. இதனால் அங்கு இயல்பு நிலை திரும்பி வருகிறது.

போர் பதற்றத்தை அடுத்து முன்னெச்சரிக்கை கருதி இந்த மாநிலங்களில் அறிவிக்கப்பட்ட தடைகளும் தற்போது திரும்ப பெறப்பட்டுள்ளன. ராஜஸ்தான் மாநிலம் பார்மர் மாவட்டத்தில் மக்களுக்கு விதிக்கப்பட்டிருந்த பல்வேறு கட்டுப்பாடுகளை மாவட்ட நிர்வாகம் இன்று காலையில் திரும்ப பெற்றுள்ளது. இதை மாவட்ட நிர்வாக அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

நேற்று (மே 11) காலை முதல் ட்ரோன் தாக்குதல், குண்டு வீச்சு போன்ற எந்தவித தாக்குதலும் இந்தியா பாகிஸ்தானின் சர்வதேச எல்லை மற்றும் எல்லை கட்டுப்பாட்டு கோட்டருகே உள்ள பகுதிகளில் இல்லை என தகவல் கிடைத்துள்ளது. இதை மாவட்ட நிர்வாகங்கள் மற்றும் போலீஸ் தரப்பு உறுதி செய்துள்ளது.

ஜம்மு காஷ்மீர், பஞ்சாப் மாநிலத்தில் இயல்பு நிலை: இந்தியா பாகிஸ்தான் இடையிலான போர் பதற்றம் காரணமாக கடந்த 4 நாட்களாக ட்ரோன் தாக்குதல், ஏவுகணை தாக்குதல், குண்டு வீச்சு போன்றவற்றை ஜம்மு காஷ்மீர் மற்றும் பஞ்சாப் மாநிலங்கள் எதிர்கொண்டன. பாகிஸ்தானின் வான்வழி தாக்குதல் முயற்சியை இந்திய பாதுகாப்பு படை வான் பாதுகாப்பு கவச அமைப்புகள் மூலம் இடைமறித்து அழித்தது குறிப்பிடத்தக்கது.

இருப்பினும் இரவு நேரங்களில் ஜம்மு காஷ்மீர், பஞ்சாப், ராஜஸ்தான், குஜராத் உள்ளிட்ட பாகிஸ்தான் எல்லையை ஒட்டியுள்ள பகுதிகளில் மின் விநியோகம் நிறுத்தப்பட்டது. போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்ட பிறகும் பாகிஸ்தான் அத்துமீறி தாக்குதல் மேற்கொண்டது. அதை சமாளிக்க நேற்று இரவும் இந்த பகுதிகளில் மின் விநியோகம் நிறுத்தப்பட்டது.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமையான நேற்று காலை முதலே எந்தவித தாக்குதலும் இந்திய எல்லையில் நடைபெறவில்லை என தகவல் கிடைத்துள்ளது. ஜம்மு காஷ்மீரின் குப்வாரா, பூஞ்ச், உதம்பூர், சம்பா, ரஜோரி, ஜம்மு, உரி, அக்னூர், ஸ்ரீநகர், பஞ்சாப் மாநிலத்தின் அமிர்தசரஸ், பதன்கோட், பெரோஸ்பூர் மற்றும் ராஜஸ்தானின் ஜெய்சல்மாரில் இயல்பு நிலை திரும்பி வருகிறது. அதே நேரத்தில் பாதுகாப்பு படை எதிர் தரப்பின் நடவடிக்கையை கண்காணித்து வருவது குறிப்பிடத்தக்கது.













# மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளதாவது

இராமநாதபுரம், மே.12-

இராமநாதபுரம் மாவட்டத்தில் 8 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் உள்ளன. அதில் சேதுபதி அரசு கலைக்கல்லூரி, இராமநாதபுரத்தில் பல்வேறு பாடப்பிரிவுகளின் கீழ் 752 இடங்களும், அரசு மகளிர் கலைக்கல்லூரி, இராமநாதபுரத்தில் பல்வேறு பாடப்பிரிவுகளின் கீழ் 560 இடங்களும், அரசு கலைக் கல்லூரி, பரமக்குடியில் பல்வேறு பாடப்பிரிவுகளின் கீழ் 744 இடங்களும், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவாடானையில் பல்வேறு பாடப்பிரிவுகளின் கீழ் 360 இடங்களும், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, முதுகுளத்தூரில் பல்வேறு பாடப்பிரிவுகளின் கீழ் 260 இடங்களும், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கடலாடியில் பல்வேறு பாடப்பிரிவுகளின் கீழ் 250 இடங்களும், பாரத ரத்னா டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, இராமேஸ்வரத்தில் பல்வேறு பாடப்பிரிவுகளின் கீழ் 220 இடங்களும், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பரமக்குடியில் பல்வேறு பாடப்பிரிவுகளின் கீழ் 290 இடங்களும் இருக்கின்றன.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்குக் கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அரசு, அரசு உதவிபெறும் கல்லூரி மாணவ ஃ மாணவியர்களுக்குப் 'புதுமைப்பெண்'' மற்றும் 'தமிழ்ப்புதல்வன்'' திட்டங்கள் மூலமாக ரூ.1000 வழங்கப்பட்டு வருகிறது. 'நான் முதல்வன் திட்டம்'' மூலம் வேலைவாய்ப்பிற்கான பயிற்சிகள் நடத்தப்பட்டு வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், அரசால் வழங்கப்படும் கல்வி உதவித்தொகைகள் மற்றும் இலவசப் பேருந்து வசதிகளும் உள்ளன. திறமை வாய்ந்த ஆசிரியர்களால் பாடங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அரசு கல்லூரிகளில் கட்டமைப்பு வசதிகளும் சிறப்பாக உள்ளன.

தமிழ்நாட்டில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 20252026 ஆம் கல்வி ஆண்டிற்கான இளநிலைப் பட்டப்படிப்பு முதலாமாண்டு மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் www.tngasa.in என்ற இணையதள முகவரியில்; 27.05.2025 வரை பதிவு செய்யலாம். தாமாக இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்க இயலாத மாணவர்கள், அனைத்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உள்ள சேர்க்கை உதவி மையங்கள் (Admission Facilitation Centre – AFC) மூலம் விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

விண்ணப்பக் கட்டணம் ஒரு மாணவருக்கு: ரூ.48 மற்றும் பதிவு கட்டணம்: ரூ.2 மட்டும் செலுத்த வேண்டும். SC/ST பிரிவினருக்கு விண்ணப்பக் கட்டணம் ஏதுமில்லை, பதிவு கட்டணம் ரூ.2 மட்டும் செலுத்த வேண்டும்.

விண்ணப்பக் கட்டணம் Debit Card/ Credit Card/ Net Banking/ UPI மூலம் இணையதளம் வாயிலாகச் செலுத்தலாம். விண்ணப்பம் இணையதளம் வாயிலாக பதிவு செய்ய இறுதி நாள் 27.05.2025 ஆகும்.

மாணவர்கள் சேர்க்கை தொடர்பான சந்தேகங்களுக்கு விளக்கம் பெற கல்லூரிக் கல்வி இயக்ககத்தில் செயல்படும் உதவி மையத்தைத் திங்கள் முதல் வெள்ளிக்கிழமைகளில் காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை 04424343106/ 24342911 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சிம்ரன்ஜீத் சிங் காலோன், இ.ஆ.ப., அவர்கள் செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்.

# இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் புள்ளி இயல் துறை மூலம், 7-வது சிறுபாசனக் கணக்கெடுப்பு மற்றும் 2-வது நீர்நிலை கணக்கெடுப்பு குறித்த மாவட்ட அளவிலான குழுக்கூட்டம் மற்றும் பயிற்சி கூட்டம்






இராமநாதபுரம், மே.12-

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் புள்ளி இயல் துறை மூலம், 7வது சிறுபாசனக் கணக்கெடுப்பு மற்றும் 2வது நீர்நிலை கணக்கெடுப்பு குறித்த மாவட்ட அளவிலான குழுக்கூட்டம் மற்றும் பயிற்சி கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன், இ,ஆ,ப. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் பேசுகையில்: சிறுபாசனக் கணக்கெடுப்பு என்பது ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் நோக்கம் சிறுபாசனப் பிரிவு சார்ந்த தெளிவான புள்ளி விவரங்களை திரட்டி நீர்வள ஆதாரங்களை மேம்படுத்துவது ஆகும்.

வருவாய் கிராம அளவில் நீர் பாசனத்திற்கு பயன்படும் கண்மாய்கள், குளங்கள், கிணறுகள் மற்றும் ஆழ்குழாய் கிணறுகள் தொடர்பான விவரம் கிராம புறங்களில் கிராம நிர்வாக அலுவலர்கள் மூலம் தேசிய தகவல் மையம் மூலம் உருவாக்கப்பட்ட கைப்பேசி செயலி வாயிலாக சேகரிக்கப் படவுள்ளது. மேலும், 2வது நீர்நிலைகள் தொடர்பான ஆய்வானது, விவசாயம் மற்றும் இதர பயன்பாடுகளுக்கான கண்மாய்கள், குளங்கள் குறித்த ஆய்வாகும். நீர்நிலைகள் தொடர்பான தரவுகளை சேகரித்து எதிர்கால திட்டமிடலுக்கு பயன்படுத்துவது இதன் முக்கிய நோக்கமாகும். கிராம புறங்களில் வருவாய் த்துறை மூலமும், நகர்ப் புறங்களில் உள்ள ாட்சித் துறை பணியாளர்கள் மற்றும் பொது பணித்துறை அலுவலர்கள் மூலம் விவரங்கள் சேகரிக்கப்படவுள்ளது. இப்பணியின் முக்கியத்துவம் கருதி வட்ட அளவில் கிராம நிர்வாக அலுவலர்கள், வருவாய் ஆய்வாளர்கள், பேரூராட்சி மற்றும் நகராட்சி பணியாளர்களுக்கு 13.05.2025 மற்றும் 14.05.2025 ஆகிய தேதிகளில் புள்ளியியல்துறை அலுவலர்கள் மூலம் முறையாக பயிற்சி அளிக்குமாறும், குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் இப்பணியினை முடிக்குமாறும் தொடர்புடைய அலுவலர்களுக்கு தெரிவித்தார். இப்பயிற்சி கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.கோவி ந்தராஜலு அவர்கள், பரமக்குடி சார் ஆட்சியர் செல்வி அபிலாஷா கௌர் இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட புள்ளி இயல் துணை இயக்குநர் திரு.கா.ஜெயசங்கர் அவர்கள் உட்பட வட்டாட்சியர்கள், நகராட்சி ஆணையர்கள், பேரூராட்சி செயல் அலுவலர்கள், பொதுப்பணித்துறை நீர்வள ஆதாரத்துறை ஃ நிலத்தடி நீர் பிரிவு அலுவலர்கள் மற்றும் புள்ளி இயல் உதவி இயக்குநர்கள், புள்ளி இயல் அலுவலர்கள், வட்டாரப் புள்ளி இயல் ஆய்வாளர்கள், புள்ளி இயல் உதவி ஆய்வாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் செய்திக்குறிப்பு

சிவகங்கை, மே.12-

இந்திய தலைமை தேர்தல் ஆணையர் திரு. ஞானேஷ் குமார் மற்றும் தேர்தல் ஆணையர்கள் டாக்டர் திரு.சுக்பீர் சிங் சந்து மற்றும் திரு.விவேக் ஜோஷி ஆகியோர் இன்று பாரதிய ஜனதாகட்சியின் (பாஜக) தேசிய தலைவரான திரு.ஜகத் பிரகாஷ் நட்டா அவர்களுடன் கலந்துரையாடினர். பல்வேறு தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளின் தலைவர்களுடன் தேர்தல் ஆணையம் நடத்தும் கலந்துரையாடல்களின் தொடர்ச்சியாக இந்த கலந்துரையாடல் அமைந்துள்ளது.

இந்திய தேர்தல் ஆணையத்துடன் நேரடியாக நடைபெறும் இக்கலந்துரையாடலில், தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சி தலைவர்கள் தங்கள் ஆலோசனைகள், கருத்துகள் மற்றும் குறைகளை பகிர்வதற்கான வாய்ப்பு வழங்குவதன் மூலம் அரசியல் கட்சிகளின் தேவையை பூர்த்தி செய்கிறது.

இந்த முயற்சி அனைத்து பங்குதாரர்களுடனும் தற்போதுள்ள சட்ட விதிகளுக்கு ஏற்ப தேர்தல் செயல்முறையை மேலும் வலுப்படுத்தும் ஆணையத்தின் ஒரு பகுதியாக இது அமைகிறது.

இதற்கு முன்னர், இந்தியா முழுவதும் 4,179 அனைத்துக் கட்சி கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. இதில் மாநில தலைமை தேர்தல் அதிகாரிகளால் (CEO) 40 கூட்டங்கள், மாவட்ட தேதல் அதிகாரிகளால் (DEO) 800 கூட்டங்கள் மற்றும் வாக்காளர் பதிவு அலுவலர்களால் (ERO) 3,879 கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் 28,000க்கு மேற்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டுள்ளனர்.

# நீலகிரியில் தனியார் பேருந்துகளுக்கு இணையாக அரசு பேருந்துகள் நவீன கேமரா வசதிகளுடன் இயக்கம்

ஊட்டி, மே.12-

தனியார் பேருந்துகளுக்கு இணையாக நீலகிரியில் அரசு பேருந்துகள் நவீன கேமரா வசதிகளுடன் இயக்கப்பட்டு வருகிறது. நீலகிரி மாவட்டம் மலை மாவட்டம் என்பதால் பெரும்பாலான பகுதிகளுக்கு சிறிய ரக பேருந்துகள் இயக்கப்படுகிறது. தற்போது நீலகிரி மாவட்டத்தில் இயக்கப்படும் பெரும்பாலான பேருந்துகள் புதியவை. மேலும், பெரும்பாலான பழைய பஸ்களும் புதுப்பிக்கப்பட்டு இயக்கப்பட்டு வருகிறது. அதேபோல், வெளி மாவட்டங்கள் மற்றும் வெளி மாநிலங்களுக்கு இயக்கப்படும் பேருந்துகளும் தற்போது புதிய பேருந்துகளே அதிகம் இயக்கப்படுகிறது.

இந்நிலையில், தற்போது புதிதாக இயக்கப்படும் அனைத்து அரசு பேருந்துகளும் நவீன வசதிகளுடன் இயக்கப்படுகிறது. ஜிபிஎஸ் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. அதேபோல், தற்போது வந்துள்ள பேருந்துகளில் தனியார் பஸ்களில் உள்ளது போல் கேமராக்களும் பொருத்தப்பட்டுள்ளன. முன் பகுதி மற்றும் பின் பகுதியில் கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது.

மேலும், டிரைவர் அருகே இந்த கண்காணிப்பு கேமராக்களின் மானிடர் வைக்கப்பட்டுள்ளது. டிரைவர்கள் பேருந்துகளை முன்னோக்கி மற்றும் பின்னோக்கி இயக்கும் போது, இந்த கேமராக்களை பார்த்து இயக்குவதால், விபத்துக்கள் தவிர்க்கப்படுகிறது.மேலும், அனைத்து பேருந்துகளுக்கும் தற்போது கதவுகள் பொருத்தப்பட்டு இயக்கப்படுகிறது. இதனால், பயணிகள் தவறி கீழே விழ வாய்ப்பில்லை. தனியார் பேருந்துகளுக்கு இணையாக அரசு பேருந்துகள் இயக்கப்படுவதால், பயணிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

# விவசாயிகளுக்கான பி.எம்.கிசான் சம்மன் நிதி மூலம் ஊக்கத்தொகை பெறுவதற்கான சிறப்பு முகாம்

## மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித் தகவல்

சிவகங்கை, மே.12-

பி.எம்.கிசான் சம்மன் நிதி மூலம் தகுதியான விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில், தகுதியுடைய அனைத்து விவசாயிகளும் சேர்ந்து பயன்பெறுவதற்கான சிறப்பு முகாம்கள் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், பொது சேவை மையங்கள் மற்றும் இந்திய அஞ்சல் வங்கிகளிலும் வருகின்ற மே31 ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது. மேலும், பி.எம் கிசான் சம்மன் நிதி திட்டத்தில் 19 வது தவணை தொகை வர விவசாயிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது. ஒரு சில விவசாயிகளுக்கு, அவர்களை பற்றிய முழு விபரங்கள் அளிக்கப்படாததால் சில தவணைகள் பெற இயலாமல் உள்ளது. அதன்படி, சிவகங்கை மாவட்டத்தில் பி.எம். கிசான் சம்மன் நிதி பெற்று வந்த விவசாயிகளில், 2,279 விவசாயிகள் தங்களது ஆதார் எண்ணை வங்கிகளில் இணைக்காததாலும், 2,839 விவசாயிகள் e-kyc பதிவு மேற்கொள்ளாததாலும் சில தவணைகள் பெற இயலாமல் உள்ளனர். எனவே, தவணைகள் பெற இயலாத விவசாயிகள் இம்முகாம்களில் கலந்து கொண்டு பயன்பெறலாம்.

அதுமட்டுமன்றி, பி.எம்.கிசான் சம்மன் நிதி திட்டத்தில் பயனடைந்து வரும் விவசாயிகள் இறந்துவிட்டால், அதன் விபரத்தினை வேளாண்மைதுறைக்கு தெரிவித்திடல் வேண்டும். இறந்த பிறகும் தவணைத்தொகை பெற்று வருவது ஆய்வில் தெரிய வரும் பட்சத்தில், அத்தொகை அவருடைய வாரிசுதாரர்களிடமிருந்து வசூலிக்கப்படும். எனவே, இறந்த பயனாளியின் இறப்பு சான்றிதழை சமர்பித்து, அவர் பெற்று வந்த நிதியை நிறுத்தி, வாரிசுதாரர்கள் தேவையான ஆவணங்களை சமர்ப்பித்து இத்திட்டத்தின் கீழ் பயன்பெறலாம். மேலும், தற்பொழுது விவசாயிகளுக்கு, விவசாயிகளுக்கான பதிவு மேற்கொள்ளப்பட்டு தனியாக அடையாள எண்ணும் வழங்கப்பட்டு வருகிறது. இனிவரும் காலங்களில், புதியதாக பி.எம்.கிசான் திட்டத்தில் பதிவு செய்யும் விவசாயிகள், பி.எம்.கிசான் சம்மன் நிதி கிடைக்கப்பெறுவதற்கு, விவசாயிகளுக்கான தனியான அடையாள எண்ணையும் சேர்த்து பதிவு செய்திடல் வேண்டும்.

எனவே, விவசாயிகள் அனைவரும் தவறாது விவசாயிகள் பொது சேவை மையம் மூலமாகவோ அல்லது வேளாண்மைத்துறை மூலமாகவோ பதிவு மேற்கொண்டு, விவசாயிகளுக்கான அடையாள எண்ணை பெற்று பயன் பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

# மாவட்ட அரசு மாதிரிப் பள்ளியில் மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத் செய்தியாளர்களுடன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, பள்ளி மாணவர்களுடன் கலந்துரையாடி, பல்வேறு உயர்கல்வி வழிகாட்டுதல்களை வழங்கினார்





தூத்துக்குடி, மே.12-

தூத்துக்குடி மாவட்டம் வல்லநாடு இன்பென்ட் ஜீசஸ் கல்லூரி வளாகக் கட்டிடத்தில் செயல்பட்டுவரும் மாவட்ட அரசு மாதிரிப் பள்ளியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.இளம்பகவத், செய்தியாளர்களுடன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, பள்ளி மாணவர்களுடன் கலந்துரையாடி, பல்வேறு உயர்கல்வி வழிகாட்டுதல்களை வழங்கினார்.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

அரசுப் பள்ளிகளின் கல்வித்தரத்தை உயர்த்த தரமான அடிப்படைக் கல்வி முதல், அரசுப்பள்ளி மாணவர்களை இந்தியாவின் தலைசிறந்த உயர்கல்வி நிறுவனங்களில் இடம்பெறச் செய்வது வரை, பள்ளிக் கல்வித்துறையின் ஒட்டுமொத்த மறுமலர்ச்சியினை ஒற்றை இலக்காகக் கொண்டு செயல்பட்டு வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பள்ளிக் கல்வித்துறையில் பல்வேறு முன்மாதிரியான திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதிலும் குறிப்பாக கடந்த 10 ஆண்டுகளாக தமிழ்நாட்டின் அரசுப் பள்ளி மாணவர்கள் நாட்டின் முதன்மை உயர்கல்வி நிறுவனங்களுக்குச் செல்லாமல் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தைப் போக்கவும், அரசுப் பள்ளி மாணவர்கள் முதன்மை உயர்கல்வி நிறுவனங்களுக்குச் செல்வதை ஊக்கப் படுத்தவும், உறுதிப்படுத்தவும் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மாதிரிப் பள்ளிகள் தொடங்கப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்டதற்கிணங்க, அனைத்து மாவட்டங்களிலும் தலா ஒரு மாதிரிப் பள்ளி செயல்பட்டு வருகிறது.

அந்தவகையில், தூத்துக்குடி மாவட்டத்தில் அரசுப் பள்ளிகளில் பயிலும் சிறந்த மாணவர்களைத் தேர்ந் தெடுத்து அவர்களுக்கு வல்லநாடு இன்பென்ட் ஜீசஸ் கல்லூரி வளாகத்தில் செயல்பட்டு வரும் அரசு மாதிரிப் பள்ளிகளில் உண்டு உறைவிட வசதியுடன் படிக்க ஏற்பாடு செய்யப்பட்டு, 2023 2024ஆம் கல்வியாண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

தூத்துக்குடி அரசு மாதரிப் பள்ளி மாணவர்களுக்கு நாட்டின் முதன்மை உயர்கல்வி நிறுவனங்களில் அதாவது, JEE, IIT, NIT, NEET மட்டுமல்லாது NIFT, CUET, CLAT என 41 வகையான நுழைவுத் தேர்வுகள் எழுதுவதற்கு தேவையான பயிற்சிகள் மற்றும் வழிகாட்டுதல் வழங்கப்பட்டதன் விளைவாக கிட்டதட்ட 26 மாணவர்கள் முதன்மை உயர்கல்வி நிறுவனங்களில் நுழைவுத் தேர்வு எழுதி தேர்வாகிவுள்ளனர். இன்னும் கிட்டதட்ட 40 மாணவர்கள் முதன்மை உயர்கல்வி நிறுவனங்களில் நுழைவுத் தேர்வு எழுதி வருகின்றனர்.

மேலும், அரசு மாதிரிப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் கல்வி, நுண்கலை மற்றும் விளையாட்டுத் துறைகளில் சிறந்து விளங்குவதற்கான வாய்ப்பையும், சிறந்த கல்வி நிறுவனங்களில் தொழில்முறை கல்வி பிரிவுகளில் சேர்ந்து பயிலும் வாய்ப்பினை உறுதி செய்தலும், சிறப்பு கற்றல் அமைப்பு மூலம் மாணவர்களின் ஒட்டுமொத்த ஆளுமைகளை மெருகேற்றி இணை கல்விச் செயல்களை மேம்படுத்துதலும், ஒவ்வொரு மாணவ, மாணவிகளுக்கும் அவர்களின் திறன், மனோதத்துவ அடிப்படையில் தொழில் வாய்ப்புகளை மேற்கொள்ள தொழில் வழிகாட்டுதலும் இப்பள்ளியின் முக்கிய நோக்கமாகும்.

அரசு மாதிரிப் பள்ளியில் ஒரு வகுப்பு நேரத்தை உயர்கல்வி வழிகாட்டுதல் வகுப்பாக நடத்தப்படுகிறது. இதில் தனித்திறன், கலைத்திறன் மேம்பாடு, முதன்மை உயர்கல்வி நிறுவனங்களில் சேர்வதற்கான வழிமு றைகள் உள்ளிட்ட பல்வேறு உயர்கல்வி வழிகாட்டுதல் நான் முதல்வன் திட்டத்தின்கீழ் வழங்கப்படுகிறது. அதுமட்டும்மல்லாமல், அரசு மாதிரிப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் தங்களது ஆரம்ப கால பள்ளிகளுக்கு சென்று அங்கு பயிலும் மாணவர்களுக்கு நாட்டில் உள்ள முதன்மை உயர்கல்வி நிறுவனங்களில் சேர்வதற்கான வழிமுறைகள், அதற்கு எப்படி எல்லாம் தங்களை தயார்படுத்திக்கொண்டு, அதற்கான நுழைவுத் தேர்வு எழுதுவது குறித்து பல்வேறு உயர்கல்வி வழிகாட்டுதல்களை வழங்கி வருகிறார்கள்.

இந்த மாதிரிப் பள்ளி உண்டு உறைவிடப்பள்ளி என்பதால் மாணவ, மாணவிகள் தங்கிப் படிக்கும் வகையில் அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன் மாணவ, மாணவி களுக்கு தனித்தனியாக விடுதியும் உள்ளது. மேலும், பள்ளி வளாகத்தில் உட்கட்டமைப்பு வசதிகள், நூலகம், ஸ்மார்ட் வகுப்பறை, கணினி அறை, இயற்பியல் மற்றும் வேதியியல் ஆய்வகம், விடுதிக் கட்டிடம், சமையலறை மற்றும் சுகாதார வளாகம் உள்ளிட்ட வசதிகள் குறித்து செய்தியாளர்களுடன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, அரசுப்பள்ளி மாணவர்கள் ஒவ்வொருவரும் இந்தியாவின் தலைசிறந்த உயர்கல்வி நிறுவனங்களில் இடம்பெறச் செய்ய வேண்டு மென்ற நோக்கில் அரசின் சார்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.க.இளம்பகவத், இ.ஆ.ப., அவர்கள் எடுத்துரைத்து, மாணவ, மாணவியர்கள் மற்றும் செய்தியாளர்களுடன் அமர்ந்து மதிய உணவு அருந்தினார்.

மேலும், JEE, IIT, NIT, CUET, CLAT உள்ளிட்ட பல்வேறு முதன்மை உயர்கல்வி நிறுவனங்கள் நடத்தும் நுழைவுத் தேர்வுகளில் தேர்வாகியுள்ள மாணவர்கள் அரசு மாதிரிப் பள்ளியின் கல்வித்தரம், உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்ட சிறப்பம்சங்கள் குறித்தும், ஆசிரியர்கள் மூலமாக வழங்கப்பட்ட பயிற்சிகள் மற்றும் வழிகாட்டுதல்கள் குறித்து எடுத்துரைத்தனர். அதுபோன்று, மாணவ, மாணவியர்களின் பெற்றோர்களும் மாதிரிப் பள்ளியில் தங்களது பிள்ளைகள் கல்வி கற்பதனால் உண்டாகும் நன்மைகள் குறித்து உருவக்கமாக எடுத்துரைத்து, அரசுப் பள்ளி மாணவர்களும் சமூகத்தில் ஒரு உயர்ந்த இடத்திற்கு செல்ல முடியும் என்பதை நிரூபிக்கும் வகையில் கல்வித்துறையில் பல்வேறு முன்மாதிரியான திட்டங்களை செயல் படுத்திவரும் தமிழ்நாடு அரசிற்கும், மாவட்ட நிர்வாகத்திற்கும் நன்றி தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திரு.கணேஷ் மூர்த்தி, அரசு மாதிரப் பள்ளி தலைமையாசிரியர் திரு.கஜேந்திரபாபு, அசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் மற்றும் பெற்றோர்கள் பலர் கலந்துகொண்டனர்.



## வேலூரில், திருவள்ளுவர் சிலை அருகில் காஷ்மீர் பஹல்காமில் தீவிரவாதிகளால் கொல்லப்பட்ட அப்பாவி மக்களுக்கு மெழுகுவர்த்தி ஏற்றி மலர்தூவி அஞ்சலி

வேலூர் மே.12-

வேலூர் மாவட்டம், வேலூர் பழைய பேருந்து நிலையம் திருவள்ளுவர் சிலை அருகே, அனைத்து வியாபாரிகள் சங்கம், மருத்துவ சங்கம், ரெட் கிராஸ், ரோட்டரி, ஜே சி ஐ வேலூர், சுதந்திர மாநகர அரிமா சங்கம், சேவை சங்கங்கள் மற்றும் தீ தடுப்பு மார்சல் தீயணைப்புத்துறை செயலாளர் மற்றும் இந்திய மருத்துவ சங்கம் டாக்டர் ஏ.எம்.இக்ரம் தலைமையில் காஷ்மீர் பஹல்காமில் தீவிரவாதிகளால் கொல்லப்பட்ட அப்பாவி மக்களுக்கு மெழுகுவர்த்தி ஏற்றி மலர் தூவி மலரஞ்சலி மரியாதை நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து தேசிய ஒருமைப்பாடு மற்றும் மத நல்லிணக்கம் குறித்து உறுதிமொழி ஏற்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் வெங்கட்ரமணன், ஆர். சீனிவாசன், ரமேஷ் குமார் ஜெயின், ராமச்சந்திரன், நியூ சங்கம் ஆப்டிகல்ஸ் சையது ஏஜாஸ், மணிச் சுடர் பாபு ஆகியோர் கலந்து கொண்டு மலர் தூவி மரியாதை செய்தனர். இதில் இந்திய மருத்துவ சங்கம் வேலூர் மாவட்ட தலைவர் வெங்கட்ராமன், செயலாளர் ஜெகதீசன், பொருளாளர் சுபாஷினி, பைன் ஆர்ட்ஸ் ஸ்வேதா, மைனாரிட்டி மாவட்ட தலைவர் வேலூர் கபீர், ஜே சி ஐ வேலூர் தலைவர் மோசஸ், செயலாளர் ஜெயவேலு, லயன்ஸ் கிளப் முன்னாள் தலைவர் சுந்தர்ராஜன், சுதந்திர மாநகர அரிமா சங்கம் பி ஆர் சுந்தர்ராஜன், பள்ளிவாசல் இமாம், இம்ரான் மற்றும் வெங்கட் பிரசாத் ஆகியோர் கலந்து கொண்டு மெழுகுவர்த்தி ஏற்றி மலர் தூவி மரியாதை செய்து, மத நல்லிணக்க நாள் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

## மானாமதுரையில் முதலிடம் மற்றும் 100% தேர்ச்சி 12ம் வகுப்பு பொதுத் தேர்வில் குட்வில் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் அசத்தல்

மானாமதுரை. மே.12-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை குட்வில் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி 100% சதவீதம் தேர்ச்சி அடைந்ததை ஒட்டி பள்ளி மாணவர்களைப் பள்ளியின் தாளாளர் பூமிநாதன் பாராட்டினார் மானாமதுரை குட்வில் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக 100 சதவீத தேர்ச்சியைப் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. இந்த ஆண்டு 100/100 மதிப்பெண்கள் 7மாணவர்களும் ,

99/100 மதிப்பெண்கள் 9 மாணவர்களும் , 30க்கும் மேற்பட்ட மாணவர்கள் 500க்கும் மேற்பட்ட மதிப்பெண்கள் பெற்று 100% தேர்ச்சி அடைந்துள்ளனர். இதில். கே.சக்தி பிரியங்கா காந்தி என்ற மாணவி 586/ 600 மதிப்பெண்கள் எடுத்து முதல் இடத்தையும், கே.ஜெகராணி 580 மதிப்பெண்கள் எடுத்து இரண்டாவது இடத்தையும் , பி.நிரஞ்சன் 577 மதிப்பெண்கள் எடுத்து மூன்றாவது இடத்தையும் பெற்று சாதனை புரிந்துள்ளார்கள். அவர்களை பள்ளி தாளாளர் பூமிநாதன் பாராட்டி கௌரவித்தார். பள்ளியின் சிறப்பம்சமாக 10 ஆண்டுகளாக தொடர் சாதனை புரிந்து வருவது என்பது குறிப்பிடத்தக்கது..












■ சிவகங்கை மாவட்டம் காளையார் கோவிலில் தமிழக வெற்றி கழகம் வடக்கு ஒன்றியம் மற்றும் குளோபல் மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம் காரைக்குடி மேக்ஸ் சி ரிசல்ட் கண் மருத்துவமனை மதுரை இணைந்து நடத்திய மாபெரும் இலவச சிறப்பு மருத்துவ முகாம் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தமிழக வெற்றி கழகம் சிவகங்கை மாவட்ட தலைவர் எஸ் .முத்து பாரதி தலைமை வகித்தார்.மாவட்ட கழக செயலாளர் ஆர். காளீஸ்வரன் இணைச் செயலாளர் சிவகங்கை முன்னிலை வகித்தனர். காளையார் கோவில் வடக்கு ஒன்றியம் கழகச் செயலாளர் எஸ் மதன் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.இம்முகாமில் சர்க்கரை நோய் ரத்த அழுத்தம் மூச்சுத் திணறல் நெஞ்சில் படபடப்பு எலும்பு மற்றும் மூட்டு வலி வயிறு பிரச்சனை கண் பார்வை குறைபாடு கண் சம்பந்தப்பட்ட பிரச்சனை உள்ளிட்ட பல பரிசோதனைகள் நடைபெற்றது.





## காரைக்குடியில் காசு பணம் துட்டு நூல் வெளியீட்டு விழா

அழகப்பா பல்கலைக்கழகம், லெக்ஷ்மி வளர்தமிழ் நூலகம் வாசகர் வட்டம் சார்பில் எழுத்தாளர், கவிஞர் மகா பிரபு உட்பட 25 எழுத்தாளர்கள் எழுதி தொகுத்த காசு பணம் துட்டு நூல் வெளியிடப்பட்டது. வளர்தமிழ் நூலக வாசகர் வட்ட ஒருங்கிணைப்பாளராக செயல்பட்டு வரும் திருக்குறள் தேனீ நல்லாசிரியர் ஜெயம் கொண்டான் அணிந்துரை எழுதியதோடு, விழாவிற்கு வந்தவர்களை வரவேற்று நிகழ்வைத் தொகுத்து வழங்கினார். நுண்கலை மற்றும் லெக்ஷ்மி வளர்தமிழ் நூலகத்தின் இயக்குநரும் மூத்த பேராசிரியருமான முனைவர் செந்தமிழ்ப்பாவை தலைமை தாங்கினார். "எழுதுகோல் தெய்வம் எழுத்தும் தெய்வம்" என்ற தலைப்பில் காப்பியக்கவிஞர் முனைவர் பாகை கண்ணதாசன் சிறப்புரை ஆற்றினார். முனைவர் பட்ட ஆய்வாளர் கார்த்திக் மிக நேர்த்தியாக நூல் மதிப்புரை செய்தார். இந்நூலின் தொகுப்பாசிரியர் இந்த நூல் உருவான விதத்தை பற்றியும், தங்கள் படைப்புகளை இந்நூலில் படைத்திட்ட எழுத்தாளர்களைப் பற்றியும் குறிப்பிட்டு பேசினார். தமிழ்நாட்டில் வளர்ந்து வரும் பதிப்பகங்களில் ஒன்றான மௌவல் பதிப்பகத்தின் 100 வது நூல் என்பது குறிப்பிட்ட அவர், இந்த நூலின் சிறப்புகளில் இதுவும் என்று மேற்கோளிட்டு காட்டினார். 25 எழுத்தாளர்கள் அவர்களது குடும்பத்தினர் நண்பர்கள் வளர்தமிழ் நூலக வாசக வட்ட உறுப்பினர்கள் இலக்கிய ஆர்வலர்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் விழாவில் கலந்துகொண்டனர். காளையார் கோயில் ஆசிரியர் பயிற்சி நிறுவனப் பேராசிரியர் முனைவர் சேவற்கொடியோன் நன்றி கூறினார்.மேனாள் மத்திய நிதி அமைச்சரும், நூலகத்தின் நிறுவனருமான ப.சிதம்பரம் இந்நூலகத்தின் முதல் வாசகர் வட்ட கூட்ட த்தில் சென்னை, மதுரை நூலக ங்களுக்கு இணையாக இந்நூலகமும் காரைக்குடியில் பயன்பட வேண்டும் என்று கூறியதற்கேற்ப, இந்நூலகம் இவ்விழாவின் மூலம் அழகான முன்னெடுப்பை எடுத்துள்ளதாக வாசகர் வட்ட பொறுப்பாளர்கள் தெரிவித்தனர்.



■ தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் மேலசொக்கநாதபுரம் ஒன்றியத்தில் தமிழக வெற்றி கழகம் போடி மேற்கு ஒன்றியம் சார்பில் பொதுமக்களுக்காக போடி தேவாரம் மெயின் ரோடு அருகே நீர் மோர் பந்தல் அமைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சி .பிரகாஷ் தேனி வடக்கு மாவட்ட செயலாளர் தலைமையிலும், . ஜெயபிரகாஷ் ஒன்றிய செயலாளர், பிரபாகரன் இணைச் செயலாளர், . மதிவாணன் ஒன்றிய பொருளாளர், முருகேசன் மேலசொக்கநாதபுரம் பேரூர் செயலாளர், செல்வகுமார் பேரூர்இணைச்செயலாளர், பேரூர் பேரூர் பொருளாளர் அரவிந்த், பேரூர் ஒன்றிய துணைச் செயலாளர் பாண்டித்துரை,பாலமுருகன்,முத்துலட்சுமி,கனகராஜ் பாலமுருகன் மற்றும் வார்டு செயலாளர்கள் தமிழக வெற்றிக்கழகம் கட்சி நிர்வாகிகளும் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்..



## வேலூர் செல்லியம்மன் கோயிலில் பாகிஸ்தான் தீவிரவாதத்தை ஒழித்து, இந்திய அனைத்து படை ராணுவம் அமைதி நிலவ, அ.தி.மு.க. சிறப்பு பிராத்தனை

வேலூர், மே.12-

வேலூர் மாவட்டம், வேலூர் புதிய பேருந்து நிலையம் அருகே, செல்லி அம்மன் கோயிலில், பாகிஸ்தான் தீவிரவாதம் ஒழிய, அனைத்து படை இந்திய இராணுவ வீரர்களுக்கும், இராணுவ தளங்களுக்கும் எந்தவித சேதமும் இன்றி வெற்றிகரமாக தீவிரவாதத்தை ஒழித்து அமைதி நிலவ, வேண்டி சிறப்பு பிரார்த்தனை வேலூர் மாவட்ட அதிமுக மாநகர செயலாளர் எஸ்.ஆர்.கே. அப்பு தலைமையில் நடைபெற்றது. இந்த சிறப்பு பிரார்த்தனையில் அதிமுகவினர் மற்றும் பொறுப்பாளர்கள் நிர்வாகிகள் உறுப்பினர்கள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டு பிரார்த்தனைகளை மேற்கொண்டனர்.



## சோழவந்தான் பகுதியில் சிவாலயங்களில் சனிப்பிரதோஷ விழா

சோழவந்தான், மே.12-

சோழவந்தான் பகுதியில் உள்ள சிவாலயங்களில் நேற்று சனிப்பிரதோஷ விழா விமரிசையாக நடைபெற்றது.சோழவந்தானில் உள்ள பிரளயநாதர் (சிவன்) கோயிலில், நேற்று சனிப்பிரதோஷ விழா நடைபெற்றது. இதன்படி பிரளயநாதர் சுவாமி, பிரளய நாயகி அம்மன், சனீஸ்வர லிங்கம், நந்தீஸ்வரருக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றது. பின்னர் சுவாமியும், அம்பாளும் ரிஷப வாகனத்தில் கோயிலை வலம் வந்து அருள்பாலித்தனர். அர்ச்சகர் ரவி சிறப்பு பூஜைகள் செய்து பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கினார்.

இதேபோல் திருவேடகம் ஏடகநாதர் மற்றும் சட்டநாத சித்தர் கோயில், தென்கரை மூலநாத சுவாமி கோயில், மன்னாடி மங்கலம் மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில், பேட்டை அருணாச்சலேஸ்வரர் கோயில், துவரிமான் மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில், திருவாலவாயநல்லூர் மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் உள்ளிட்ட பல்வேறு சிவாலயங்களிலும் இவ்விழா சிறப்பாக நடைபெற்றது. அனைத்து கோயில்களிலும் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.




## வேலூர் கணியம்பாடி, புகழ்பெற்ற கனாதிபதி துளசி'ஸ் ஜெயின் பொறியியல் கல்லூரியில் 20, 21ம் பட்டமளிப்பு விழா

வேலூர், மே.12-

வேலூர் மாவட்டம், வேலூர் அடுத்த கணியம்பாடி, புகழ்பெற்ற கனாதிபதி துளசி'ஸ் ஜெயின் பொறியியல் கல்லூரியில், 20, 21ம் பட்டமளிப்பு விழா, கல்லூரி நிறுவனரும், அறங்காவலருமான சு.வினோத்குமார் தலைமையிலும், கல்லூரி முதல்வர் மு.பாரதி முன்னிலையில் நடைபெற்றது. இந்தப் பட்டமளிப்பு விழாவில் சிறப்பு அழைப்பாளராக தமிழக முன்னாள். தலைமைச் செயலாளர் முனைவர். கிரிஜா வைத்தியநாதன் கலந்து கொண்டு, பட்டம் பெரும் மாணவர்களை உற்சாகப்படுத்தி சிறப்புரையாற்றி, வாழ்த்துதெரிவித்து 315 பொறியியல் பட்டதாரி மாணவ மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினர்.







## மானாமதுரை சந்திப்பு நிலையத்தில் டிஜிட்டல் போர்டு வைக்கப்படுமா?

மானாமதுரை, மே12-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சந்திப்பு நிலையம் ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்டது அதற்குப் பின்னர் ரயில் நிலைய கட்டிடங்கள் ஒரு சில பகுதியில் புதுப்பிக்கப்பட்டிருந்தாலும் காவல் நிலையங்கள் பழைய கட்டிடங்களே இயங்கி வருகிறது பழைய கட்டிடங்களை அகற்றி விட்டு புதிய கட்டிடங்கள் கட்ட வேண்டும் என கடந்த சில மாதங்களுக்கு முன்பு கோரிக்கை எழுந்தது இதில் மேலும் பற்றாக்குறையாக தினசரி எத்தனை ரயில்கள் வந்து செல்லும் என அட்டவணை மட்டுமே உள்ளது அவ்வப்போது ரத்து செய்யப்படும் ரயில்கள் சிறிய அறிவிப்புகளை வைப்பதால் வெளியூர் வாசிகளுக்கு தெரிந்து கொள்வதில் சிரமம் ஏற்படுகிறது.

பிளாட்பாரங்களில் பொதுமக்கள் மற்றும் பயணிகளின் வசதிக்காக கோச் பொசிஷன் தகவல் பலகையும் அமைக்க வேண்டும் இதனால் ரயிலில் முன்பதிவு செய்து விட்டு வெளியூர்களுக்கு செல்லும் பயணிகள் மற்றும் பொதுமக்கள் தாங்கள் பயணம் செய்யும் ரயில் பெட்டிகளின் நிலை பற்றி தெரிந்து கொள்ள முடியாமல் செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர்.இதனை தவிர்க்கும் வகையில் மானாமதுரை சந்திப்பு ரயில் நிலையத்தில் டிஜிட்டல் போர்டு வைத்தால் தெரிந்து கொள்ள ஏதுவாக இருக்கும் டிஜிட்டல் போர்டுகளை வைக்க தெற்கு ரயில்வே நிர்வாகம் நடவடிக்கை எடுக்குமா.?

மாலை தந்தி

திங்கள்கிழமை 12.5.2025

























Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161